தரம் 10 11

O/L

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தொடரியல்

ZOOM ONLINE CLASS

சரியான ... றைத்
தெ... யுங்கள்

TUTE 42




The Best TAMIL ACADEMY
அகரம்
தினேஸ் ONLINE ACADEMY
REGISTER NOW 0778054232



தமிழ் ஆசான்
"அகரம் தினேஸ்"
SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE



05 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

## தொடரியல்

### 8.1 தொடரியல்

பல சொற்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து பொருள் தரத்தக்க வகையில் வருவது தொடர் எனப்படும். தொடரியில் என்பது இவ்வாறு தொடர்ந்து வரும் சொற்கள் தொடர்பான கற்கை ஆகும்.

### 8.2 தொகை என்பதன் பொருள் யாது?

தொகை என்பது "மறைந்து" என்று பொருள்.

### 8.3 தொகை நிலைத் தொடர்

கூட்டுப்பெயராக்கத்தில் (கூட்டுப்பெயர்ச் சொற்களை அமைக்கும் போது) இரண்டு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபுகளோ அல்லது வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ (தொக்கி) மறைந்து ஒரு சொல் போல வருமானால் அது தொகைச் சொல் எனப்படும். இது ஆறு வகைப்படும்,

- வேற்றுமைத் தொகை
- வினைத்தொகை
- பண்புத் தொகை
- உவமைத் தொகை
- உம்மைத்தொகை
- அன்மொழித்தொகை

உதாரணம்:

மீன்சந்தை – மீனை விற்கும் சந்தை

தேர்ப்பாகன் - தேரை ஓட்டும் பாகன்

கண்டி சென்றேன் - கண்டிக்குச் சென்றேன்.

வட்டமேசை - வட்டமான மேசை

கண்ணீர் - கண்ணில் இருந்து வரும் நீர்

இவ்வாறு ஒரு சொல் போல இயங்குவதும், உருபுகள் மறைந்து வருவதும் தொகைநிலைத் தொடர்கள் (தொகைச் சொற்கள்) எனப்படும்..

### 8.5 வேற்றுமைத் தொகை என்றால் என்ன?

ஒரு தொடரில் வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், கு, இன், அது, கண்) மறைந்து நின்று பொருள் உணர்த்துவது வேற்றுமைத் தொகை எனப்படும்.

தேர்ப்பாகன் - தேரை ஓட்டும் பாகன்

பால் பருகினான் - பாலைப் பருகினான்.

குருவிக்கூடு - குருவியின் கூடு

கண்டி சென்றான் - கண்டிக்குச் சென்றான்

| | | |
|---|---|---|
| பால் குடித்தான் | - | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| பால் குடம் | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| தலை வணங்கினான் | - | மூன்றாம் வேற்றுமைத் தொகை |
| பொன் வளையல் | - | மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| என் மகள் | - | நான்காம் வேற்றுமைத் தொகை |
| குழந்தைப் பால் | - | நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| ஊர் நீங்கினான் | - | ஐந்தாம் வேற்றுமைத் தொகை |
| வாய்ப்பாட்டு | - | ஐந்தாம் வேற்றுமைத் உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| நண்பன் வீடு | - | ஆறாம் வேற்றுமைத் தொகை |
| மலைக் கோயில் | - | ஏழாம் வேற்றுமை |
| தண்ணீர்ப் பாம்பு | - | ஏழாம் வேற்றுமைத் உருபும் பயனும் உடன் தொக்க தொகை |

### 8.6 வினைத்தொகை

காலத்தைக் காட்டக்கூடிய கால இடைநிலைகளும், பெயரெச்ச விகுதிகளும் மறைந்து நிற்க, வினையடியும் பெயர்ச்சொல்லும் இணைந்து பிறக்கும் தொகை வினைத்தொகை எனப்படும்.

| வினைத் தொகை | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| குடிநீர்<br>சுடுசோறு<br>வீசுதென்றல்<br>ஊறுகாய்<br>குளிர்நிலவு | குடித்தநீர்<br>சுட்ட சோறு<br>வீசிய தென்றல்<br>ஊறிய காய்<br>குளிர்ந்த நிலவு | குடிக்கின்ற நீர்<br>சுடுகின்ற சோறு<br>வீசுகின்ற தென்றல்<br>ஊறுகின்ற காய்<br>குளிகின்ற நிலவு | குடிக்கும் நீர்<br>சுடும் சோறு<br>வீசும் தென்றல்<br>ஊறும் காகுடித்ய்<br>குளிரும் நிலவு |

### 8.7 பண்புத்தொகை

வடிவம், நிறம், சுவை, அளவு போன்றவற்றை உணர்தும் பண்புப் பெயருக்கும், அப் பண்புப் பெயரை ஏற்று வரும் பெயர்ச் சொல்லுக்கும் இடையில் “மை” என்ற பண்பு

விகுதியும் "ஆகிய", "ஆன" என்ற பண்பு உருபுகளும் மறைந்து வருவது பண்புத் தொகை எனப்படும்.

உதாரணம் - வட்டமேசை - வட்டமான மேசை

செந்தமிழ் - செம்மையாகிய தமிழ்

வெள்ளைப்பூ - வெண்மையான

செந்தாமரை – வண்ணப் பண்புத் தொகை

வட்ட நிலா – வடிவப் பண்புத் தொகை

முத்தமிழ் - அளவுப் பண்புத் தொகை

இன் சொல் - சுவைப் பண்புத்தொகை

செம்மையாகிய தாமரை, வட்டமாகிய நிலா, மூன்றாகிய தமிழ், இனிமையாகிய சொல் என விரியும்.

**8.8 இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பது பொதுப்பெயரோடு சிறப்புப் பெயர் அல்லது சிறப்புப் பெயரோடு பொதுப் பெயர் சேர்ந்து ஒரு பொருளை உணர்த்துவதாகும்.

உதாரணம் : - பலா மரம் - பலா என்பது சிறப்புப் பெயர், மரம் என்பது பொதுப் பெயர்ச் சொல் (பலாவாகிய மரம்)

பனைமரம் - பனை (சிறப்பு), மரம் (பொது)

செண்பகப்பூ - செண்பகம் (சிறப்பு), பூ (பொது)

சாரைப்பாம்பு - சாரை (சிறப்பு), பாம்பு (பொது)

தமிழ்மொழி - தமிழ் (சிறப்பு), மொழி (பொது)

இலங்கைநாடு - இலங்கை (சிறப்பு), நாடு (பொது)

**8.9 உவமைத் தொகை**

உவமை உருபுகள் மறைந்து நிற்கும் தொகை உவமைத் தொகை எனப்படும்.

மதிமுகம் - மதிபோன்ற முகம்

மலரடி - மலர் போன்ற அடி

கனிவாய் - கனி போன்ற வாய்

தேன்மொழி - தேன் போன்ற மொழி

இவ்வாறாக போல, போன்ற, புரைய, ஒப்ப, அன்ன என்ற உவமை உருபுகள் மறைந்து நின்று பொருள் தருவது உவமைத் தொகை எனப்படும்.



AGARAM DHINES

**8.10 உம்மைத்தொகை**

உம் என்ற இடைச்சொல் மறைந்து நிற்கும் தொடர்கள் உம்மைத் தொகை எனப்படும்.

எண்ணெழுத்து – எண்ணும் எழுத்தும்

சேர, சோழ, பாண்டியன் - சேரனும் சோழனும் பாண்டியனும்

தாய் தந்தை - தாயும் தந்தையும்

மாடுகன்று - மாடும் கன்றும்

**8.12 அன்மொழித்தொகை என்றால் என்ன?**

அல் + மொழி – (அல்லாத சொல்)

இதுவரைப் பார்த்த தொகைகளில் அல்லாத சொற்கள் மறைந்து வருவது அன்மொழித் தொகை.

**"ஆயிழை வந்தாள்"** - இதில் ஆயிழையென்பது காலங்காட்டாத வினைத்தொகை (ஆராய்ந்த இழை, ஆராய்கின்ற இழை, ஆராயும் இழை) ஆயின் இவ்விடத்தில் அந்த இழையணிந்த பெண்ணென்று பொருளாததால், இது வினைத்தொகைக்குப் புறத்தே பிறந்த அன்மொழித்தொகை எனப்படும்.

**பூங்குழல் உடையாள்** - வேற்றுமைத்தொகை (பூவையுடைய குழல் உடையாள்) இதில் குழலை என்ற சொல்லின் இருதியில் "ஐ" என்ற வேற்றுமை உருபை அடுத்து உடையாள் என்ற பெண்ணை குறித்து வருவதோடு, வேற்றுமைத் தொகைக்கு அடுத்து (புறத்துப்) பிறந்த அன்மொழித்தொகை.

**கருங்குழல் சிரித்தாள்** - பண்புத்தொகை (கருமையாகிய குழலினை உடையாள்) இதில் உள்ள கருங்குழலானது கருமை ஆகிய குழல் என்று பண்புத்தொகையாக பிறந்திருப்பினும். சிரித்தாள் என்ற பயனிலை கருமையாகிய கூந்தலைக் குறிக்காமல், அக் கூந்தலை உடையவளான பெண்ணைக் குறித்து பிறந்துள்ளதால். இது பண்புத் தொகைக்கு அடுத்து (புறத்துப்) பிறந்த அன்மொழித்தொகை

**தேன்மொழி பேசினாள்** – உவமைத் தொகை (தேன் போன்ற மொழியை உடையாள்) இதில் உள்ள தேன்மொழி என்பது, தேன் போன்ற மொழி எனும் உவமைத் தொகையாக பிறந்துள்ளது. இருப்பினும், அதனைத் தொடர்ந்து வந்துள்ள பேசினாள் என்ற பயனிலைக்கு ஏற்று வந்த "தேன்மொழி" என்ற உவமைத்தொகை பேசியவளான, பெண்ணைக் குறித்து வந்துள்ளது. எனவே, இத்தொடர் உவமைத் தொகைக்கு அடுத்து (புறத்துப்) பிறந்த அன்மொழித்தொகை.

**உயிர் மெய் எழுத்து** - உம்மைத்தொகை ( உயிரும் மெய்யும் இணைந்துப் பிறந்த உயிர் மெய்யெழுத்து) இங்கு உயிர், மெய் என்பதை தனித்தனியே உணர்த்தாது, தமிழ் நெடுங்கணக்கில் உயிர்மெய்யெழுத்தைக் குறித்துப் பிறந்துள்ளது. எனவே உம்மைத் தொகைக்குப் அடுத்து (புறத்துப்) பிறந்த அன்மொழித்தொகை

AGARAM DHINES

## 8.13 தொகா நிலைத் தொடர்கள்

ஒரு தொடர் மொழியில் இரு சொற்கள் இருந்து, அவற்றின் இடையில் சொல்லோ, சொல் உருபோ மறையாது பொருளை உணர்த்துவது தொகாநிலைத் தொடர் எனப்படும்.

மழை பெய்தது.

மேலே உள்ளத் தொடரில் "மழை" என்ற எழுவாயும் "பெய்தது" என்னும் பயனிலையும் தொடர்ந்து நின்று பொருள் வேறுபடாது பொருளை உணர்த்தி வந்துள்ளது. எனவே இது தொகாநிலைத் தொடர் ஆகும்.

எழுவாய்த் தொடர் - கந்தன் எழுதினான்.

விளித்தொடர் - மழையே வா!

வினைமுற்றுத் தொடர் - வந்தார் அமைச்சர்

பெயரெச்சத் தொடர் - படித்த பாடம்

வினையெச்சத் தொடர் - கூடி மகிழ்ந்தனர்

வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் - செய்யுளை எழுதினான்

இடைச் சொல் - மற்றொன்று (மற்று ஒன்று)

உரிச் சொல் - சாலச் சிறந்தது

அடுக்குத் தொடர் - நன்று நன்று

AGARAM DHINES